2021 செப்டம்பர் 4] [திரு. ஆர். காந்தி]

விஷயமல்ல. தலைவர் சாதாரணமானவர் அல்ல; அதை முதலில் புரிந்துகொள்ளுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு உலகமே பாராட்டுகிற அளவுக்கு அவர் சிறந்த தலைவர். விதி 110–ன்கீழ் ஒவ்வொரு நாளும் பல அறிவிப்புகளை அறிவிக்கிறார். கடந்த ஆட்சியில்கூட விதி 110–ன்கீழ் தினமும் அறிவிப்புகளை அறிவிப்பார்கள்; அதற்கு ஒன்றும் value கிடையாது. இன்றைக்கு எது அறிவித்தாலும் valuable; மக்கள் பாராட்டுகிற அளவுக்கு இருக்கும். இதற்காக எவ்வளவு பாராட்டுகள் வரப்போகின்றன என்று நாளைக்குப் பாருங்கள். அந்த அளவுக்குப் பாராட்டு இந்த அறிவிப்பிற்குக் கிடைக்கும். அதனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. கவன ஈர்ப்பு

விருதுநகர் நகராட்சியில் நடைபெற்று வரும் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன் அவர்கள்.

***திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய குடும்பத் தலைவர் கலைஞர் அவர்கள் துயில் கொண்டிருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். நமது மக்கள் முதல்வர் மாண்புமிகு தளபதியார் அவர்களையும், மாண்புமிகு கழக இளைஞரணியின் செயலாளர் மாண்புமிகு இளைய தளபதி அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் நகராட்சியில் நடைபெற்றுவரும் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் குறித்து மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று மாண்புமிகு உறுப்பினர்கள் மேஜையில் உள்ள கணினியில் கவன ஈர்ப்பு என்ற தலைப்பில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. அதனை அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

விவர அறிக்கை

விருதுநகர் நகராட்சி, விருதுநகர் மாவட்டத்தின் தலைநகரமாகவும், தேர்வுநிலை நகராட்சியாகவும் அமைந்துள்ளது. விருதுநகர் நகராட்சியின் பரப்பளவு 6.64 ச.கி.மீ. ஆகும். விருதுநகர் நகராட்சி 36 வார்டுகளை உள்ளடக்கியுள்ளது. விருதுநகர் நகராட்சியின் மொத்த மக்கள்தொகை 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 72,144 ஆகும். இதன் மக்கள்தொகை அடிப்படை ஆண்டு 2018–ல் 77,000 என்றும், இடைநிலை ஆண்டு 2023–ல் 85,000 என்றும், உச்சக்கட்ட ஆண்டு 2038–ல் 93,000 என்றும் கணக்கிடப்பட்டுள்ளது.

விருதுநகர் நகராட்சிக்கு பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தும் பொருட்டு, அரசாணை (நிலை) எண் 423, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 19–10–2005–ல் ரூ.2,325 இலட்சத்திற்கும், ஆண்டு பராமரிப்பு மதிப்பீடு ரூ.29.27 இலட்சத்திற்கும் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டது. பின்னர் திருத்திய நிருவாக ஒப்புதல் அரசாணை (நிலை) எண் 132, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 28–2–2011–ல் ரூ.2,785 இலட்சத்திற்கும், ஆண்டு பராமரிப்பு மதிப்பீடு ரூ.35.64 இலட்சத்திற்கும் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட விருதுநகர் பாதாள சாக்கடைத் திட்டத்தில், சாக்கடை குழாய் பதிக்கும் பணிகள் இரண்டு தொகுப்புகள் மற்றும் சுத்திகரிப்பு நிலையம் ஆகியவற்றை அமைக்க 2,785 இலட்சம் ரூபாய்க்கு திருத்திய மதிப்பீட்டில் அரசின் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை கழிவுநீர் சேகரிப்பு கட்டமைப்பு பணிகள் (Collection System) தொகுப்பு–1, தொகுப்பு–2, 100 விழுக்காடும் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய பணிகள் (STP–7.65 MLD) 100 விழுக்காடும் நிறைவேற்றப்பட்டுள்ளன.

கழிவுநீர் சேகரிப்பு அமைக்கும் பணிகள் அனைத்தும் முடிவு பெற்று கழிவுநீர் சேகரிக்கும் குழாய்மூலம் 36.00 இலட்சம் லிட்டர் வரை கழிவுநீர் தினமும் சுத்திகரிப்பு நிலையத்திற்கு அனுப்பப்பட்டு, சுத்திகரிப்பு செய்யப்பட்டு வருகிறது.

2021 செப்டம்பர் 4] [திரு. கே.என். நேரு]

இத்திட்டத்தினை முழுமையான பயன்பாட்டிற்குக் கொண்டு வரவும், மேலும் விருதுநகர் நகராட்சியினை தூய்மையான நகரமாக மாற்றிடும் வகையிலும், பாதாள சாக்கடைத் திட்டத்தின்கீழ் பயனாளிகளால் இணைக்கப்படாத கழிவுநீர் வீட்டு இணைப்புகள் 12,000 எண்ணிக்கையினை பாதாள சாக்கடைத் திட்டத்தின்கீழ் இணைக்கவும், அதற்கான செலவினத் தொகை ரூ.650 இலட்சத்தினை வட்டியில்லாத கடனாக தமிழ்நாடு நகர்ப்புற சேவை கட்டமைப்பு நிதி இணையம்மூலம் (TUFIDCO) பெறவும், தற்போது வரை 8,439 எண்ணம் உள் குழாய் வீட்டு கழிவுநீர் இணைப்புகளை முடிக்கவும், விடுபட்ட இணைப்புகளை அக்டோபர் 2021-க்குள் முடிக்கவும் இலக்கிடப்பட்டுள்ளது. மேலும், விருதுநகர் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ள அனைத்து வார்டுகளையும், தற்போது விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளையும் சேர்த்து, இத்திட்டத்தினைச் செயல்படுத்த ஏதுவாக, விரிவான திட்ட அறிக்கை, தனியார் கலந்தாலோசகர்மூலம் TNUIFSL-ன் PDGF நிதியின்கீழ் தயார் செய்யப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன் அவர்கள்.

திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். இருந்தபோதிலும், எந்த ஒரு திட்டத்தையும் விரைந்து முடித்துக் கொடுக்கக்கூடிய அமைச்சராக இருக்கின்ற காரணத்தினால், விருதுநகரில் இருக்கக்கூடிய சூழ்நிலைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்தால், விரைந்து முடித்துக்கொடுப்பார் என்ற நோக்கத்திலே, அங்கே இருக்கின்ற சூழ்நிலையை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

விருதுநகர், பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் பிறந்த ஊராகும். அதேபோன்று தமிழ்நாடு என்று பெயர் சூட்டக் காரணமாக இருந்த தியாகி சங்கரலிங்கனார் பிறந்த ஊராகும். விருதுநகரில் பாதாள சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக, தலைவர் கலைஞர் அவர்கள் 2006 ஆம் ஆண்டு முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன், 27.85 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து 75.22 கிலோ மீட்டர் தூரப் பணிகள் 3 சிப்பங்களாகப் பிரிக்கப்பட்டு, சிப்பம் ஒன்று, சிப்பம் இரண்டு கழிவுநீர் செல்லக்கூடிய வாய்க்கால்கள் கட்டக்கூடிய பணியும் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், சுருக்கமாகச் சொல்லுங்கள், சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்: இல்லை, விவரமாகச் சொல்லிவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், இன்னும் ஒரு கேள்வி கேட்க வாய்ப்பு இருக்கின்றது. அதனால் சுருக்கமாக உரையை முடியுங்கள்.

திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்: சிப்பம் 3 சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கான பணி கடந்த 12 வருடங்களாக நடைபெற்று வருகிறது. 2011 ஆம் ஆண்டு 80 சதவிகிதப் பணிகள் முடிவடைந்துவிட்டன. கடந்த 10 ஆண்டுகளாக எஞ்சிய 20 சதவிகிதப் பணிகள் நிலுவையில் உள்ளன. ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகு அந்தத் திட்டத்திலே இன்னும் 3 கிலோ மீட்டர் பணிகள் நடைபெறாமல் இருக்கின்றன. ஆனால், இந்தத் திட்டப் பணிகளெல்லாம் முடிவுற்றதாக இன்றையதினம் விவர அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. அதேநேரத்திலே குடியிருப்புகளில் இருக்கக்கூடிய கழிவுநீர் வெளியே செல்லக்கூடிய வகையில் 12,090 வீடுகளுக்கு இணைப்பு கொடுக்க வேண்டும். இதுவரை 8,000 வீடுகளுக்கு மட்டும்தான் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 4,090 வீடுகளுக்கு இன்னும் இணைப்பு கொடுக்காத காரணத்தினால், கழிவுநீர், திறந்த வாய்க்கால் வழியாக கவுசிகா ஆற்றில் சென்று கலக்கிறது. அந்தப் பாதாள சாக்கடைத் திட்டத்தின் கழிவுநீர் தெருக்களில் ஓடுவதால் பொது மக்கள் மற்றும் பள்ளி மாணவர்கள் நடமாடுவதற்கு இடையூறு ஏற்படுகிறது. இதில் முக்கியமான விஷயம் என்னவென்று சொன்னால், பணிகள் நடைபெறும்போது, பணிகள் சிரமமின்றி நடைபெறுவதற்காக தடுப்புச் சுவர்கள் அமைக்கப்பட்டன. அந்தத் தடுப்புகளையெல்லாம் அகற்றாத காரணத்தினால் தண்ணீர் நகர்ந்து சுத்திகரிப்பு நிலையத்திற்குச் செல்வதற்கு சிரமமாக இருக்கின்றது. எனவே, அந்தத் தடுப்புகள், dummy எல்லாம் அகற்றப்பட்டு கழிவுநீர் எளிதிலே செல்லக்கூடிய வகையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்துக் கொடுத்தால் கழிவுநீர் செல்வதற்கு வசதியாக இருக்கும். எனவே, (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லட்டும். மாண்புமிகு

2021 செப்டம்பர் 4] [பேரவைத் தலைவர்]

அமைச்சர் அவர்கள் கேள்வியைப் புரிந்துகொண்டார்கள்; உள் வாங்கிக்கொண்டார்கள்.

முற்பகல் 10–25

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சியினுடைய மொத்த பரப்பளவு 6.64 சதுர கிலோ மீட்டராகும். அங்கே 36 வார்டுகள் இருக்கின்றன. 2011 ஆம் ஆண்டு கணக்குப்படி மக்கள்தொகை 72,144. 2038–ல் 93,000 மக்கள் இருப்பார்கள் என்று கணக்கிடப்பட்டு,இந்தத் திட்டம் தீட்டப்பட்டது. மொத்த குடியிருப்புகள் 25,948. அதாவது, 2005 ஆம் ஆண்டு ரூ.23.25 கோடிக்கு முதலில், அரசாணை வெளியிடப்பட்டது. 2011 ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீடு ரூ.27.85 கோடிக்கு அனுப்பப்பட்டது. ஆண்டு பராமரிப்புத் தொகையாக, ரூ.35.64 இலட்சம் அதற்காக கொடுத்துக் கொண்டிருக்கிறோம். நகராட்சியினுடைய மொத்த நீளம் 98.120 கிலோ மீட்டராகும். அதில், ஏற்கெனவே 74.450 கிலோ மீட்டர் தூரத்திற்கு கழிவுநீர்க் குழாய்கள் பதிக்கப்பட்டிருக்கின்றன. Manholes 2,918. திட்டப் பணியினுடைய முன்னேற்றம் முழுமையாக்கப்பட்டிருக்கிறது. பாதாள சாக்கடைத் திட்டம்மூலம், தினமும் 7.65 MLD கழிவுநீர் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். தினமும், 36 இலட்சம் லிட்டர் கழிவுநீர் சுத்திகரிக்கப்படுகிறது. இன்னும், விருதுநகரில் கழிவுநீர்க் குழாய் இணைக்கப்படாத வீடுகளின் எண்ணிக்கை 12,000. அதிலே, 8,439 வீடுகள், இப்போது கழிவுநீர்க் குழாயோடு இணைக்கப்பட்டுவிட்டன. மீதமுள்ள வீடுகளையும் இணைப்பதற்காக, ஒரு புதிய விரைவுத் திட்டத்தை உருவாக்கி, அதிலே, 36 வார்டுகளில் உள்ள விடுபட்ட பகுதிகளை இணைப்பதற்காக, 6½ கோடி ரூபாய் செலவிலே இந்தத் திட்டம் நிறைவேற்றப்படவிருக்கின்றது. அதுவும், இன்னும் ஓரிரு மாதங்களில் முழுமையாக்கப்பட்டு, உறுப்பினர் சொன்னதைப்போல, கழிவுநீர் வெளியே செல்லாமல் முழுமையாக சுத்திகரிப்பு நிலையத்திற்கு செல்வதற்கேற்றார்போல், இந்தப் பணிகள் விரைந்து முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன் அவர்கள். நன்றி மட்டும் சொல்லி முடியுங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அழகாகப் பதில் சொல்லியிருக்கிறார்கள்.

[2021 செப்டம்பர் 4

திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் திட்டம் குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள், எஞ்சிய 23 கிலோ மீட்டர் பணிகளை விரைந்து முடிப்பதாகச் சொல்லியிருக்கின்றார்கள். அதற்கான நிதியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைந்து ஒதுக்கீடு செய்து, அதை முடித்துக் கொடுக்க வேண்டும்.

அதேநேரத்தில், இரண்டு விஷயங்களுக்காக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நான் நன்றி சொல்ல வேண்டும். தேர்தல் நேரத்தில், எங்களுடைய விருதுநகர் மாவட்டத்துக்கு தேர்தல் பிரச்சாரத்திற்காக வந்தபோது, விருதுநகர் மாவட்டத்தில் இருக்கக்கூடிய தொழில் வளத்தைப் பெருக்குவதற்காக, தொழிற்பூங்கா அமைத்துக் கொடுப்பேன் என்று சொன்னார்கள். சொன்னதைச் செய்யக்கூடியவராக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இருக்கக்கூடிய காரணத்தினால், 250 ஏக்கர் நிலப்பரப்பில், 400 கோடி ரூபாய் மதிப்பீட்டில், விருதுநகர் அருகில் இருக்கக்கூடிய குமாரலிங்காபுரத்தில் தொழிற்பூங்கா அமைக்கப்படும் என்று அவையிலே அறிவிக்கப்பட்டு, அதற்கான அரசாணையும் வெளியிடப்பட்டு, அந்தப் பணிகளைச் செய்து கொடுப்பதற்கு முயற்சித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நான் நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன். துறையினுடைய அமைச்சர் மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ஆர். அவர்களுக்கும் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மற்றொன்று. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லாத திட்டங்களையும் செய்து கொண்டிருக்கின்ற காரணத்தினால், விருதுநகர் மாவட்டத்துக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் கட்டுவதற்காக, ரூ.72 கோடி ஒதுக்கீடு செய்து, மக்கள் பயன்பாட்டிற்காக அந்தத் திட்டத்தையும் அவர்கள் நிறைவேற்றிக் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மீண்டும், மீண்டும் ஒருமுறை நன்றி சொல்லி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், மாண்புமிகு உறுப்பினர் நன்றி சொல்லிவிட்டார். எனவே, அடுத்த subject-க்குச் செல்லலாம்.